1993 டிசம்பர் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணை வினா குளிர் சாதன வசதி பற்றி மட்டும் இருக்க வேண்டும். பிளாக்கில் டிக்கெட் என்பது எல்லாம் வேறு. அதற்கு தனிக் கேள்வி போட வேண்டும்.

வினா எண் 95, திரு. கு. சீனிவாசன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

95—

*21041— திரு. கு. சீனிவாசன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி இராஜகோபால்சாமி கலைக் கல்லூரியில் பட்ட மேற்படிப்புகளாக எம். காம்., எம். எஸ்சி., பி. எஸ்சி., கணிப்பொறி அறிவியல் ஆகிய வகுப்புகள் தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும் ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது வாய்ப்பு இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி இராஜகோபால்சாமி அரசினர் கலைக் கல்லூரியில், அந்தக் கல்லூரி தொடங்கப்பட்டு 20 ஆண்டுக் காலம் ஆகியும் இளங்கலை பட்டப் படிப்புகள் மட்டும் அங்கே இருக்கின்றன. முதுகலைப் பட்டப் படிப்போ, மற்ற படிப்புகளுக்கோ கிட்டத்தட்ட 50 மைல்களுக்கு அப்பாலுள்ள பூண்டி அல்லது கும்பகோணம் போன்ற இடங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கின்ற காரணத்தினால், இந்த ஆண்டில் இல்லாவிட்டாலும் வரும் நிதியாண்டிலாவது முதுகலைப் பட்டப் படிப்புகள் தொடங்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிய பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிற் கணிப்பொறி அறிவியல் போன்ற பட்டம் மற்றும் பட்ட மே

படிப்பு—இவைகளை மட்டுமே இனி அரசுக் கல்லூரிகளில் தொடங்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள். மன்னார்குடி இராஜகோபாலசாமி அரசு கலைக் கல்லூரி முதல்வரிடமிருந்து உரிய முன்மொழிவுகள் வரப்பெற்றால் பகுதி-2 திட்டத்தில் அரசு ஒதுக்கீடு செய்யும் நிதிக்கு ஏற்பவும், தேவைக்கு ஏற்பவும் முன்னுரிமை அடிப்படையிலும் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கலைக் கல்லூரிகளில் கணிப்பொறி அறிவியல் போன்ற வகுப்புகள் மட்டும்தான் தொடங்கப்படும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மன்னார்குடி அரசினர் கலைக் கல்லூரியில் பி.எஸ்சி. (கம்ப்யூட்டர் சயன்ஸ்) ஆரம்பிப்பதற்கு அனுமதி கேட்டு மனு கொடுத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே வரும் நிதியாண்டில் பி.எஸ்சி. (கம்ப்யூட்டர் சயன்ஸ்) ஆரம்பிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி-2 திட்டத்தில் அரசு ஒதுக்கீடு செய்யும் நிதிக்கு ஏற்பவும், தேவைக்கு ஏற்பவும் முன்னுரிமை அடிப்படையிலும் இந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 96, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்.

96—

தரங்கம்பாடியில் நிலவள வங்கி துவக்குதல்.

*17242— திரு. எம். பூராசாமி:

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி தரங்கம்பாடியில் நிலவள வங்கி துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.